


# ESBM

## தொழிலுரிமைத்துவமும்
## சிறியவியாபார
## முகாமைத்துவமும் உயர்தர
## சான்றிதழ்

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**
**தொழிலுரிமைத்துவமும் சிறிய வியாபார**
**முகாமைத்துவமும் உயர்தர சான்றிதழ் கற்கை நெறி (ESBM)**
**கல்வியாண்டு 2022 - 2023**

இக் கைநூல் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவக் கற்கைகள் துறையினால் 2022 – 2023 ம் கற்கை வருடத்திற்காக வழங்கப்படும் தொழிலுரிமைத்துவமும் சிறிய வியாபார முகாமைத்துவமும் உயர்தர சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டம் பற்றிய விரிவான விபரங்களைத் தருகின்றது.

இக் கைநூலின் தெளிவுத் தன்மையை நிச்சயப்படுத்த சகல முயற்சிகளும் எடுக்கப்படும் அதேவேளை, இக் கைநூலின் உள்ளடக்கம் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் முழுமையான ஒழுங்கு விதியில் அல்லது கொள்கையில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப இடம் பெறும் மாற்றம் அல்லது திருத்தத்திற்கு உள்ளாகலாம்.

நாவல,
நுகேகொட.
ஜுன் 2022

**உள்ளடக்கம்** **பக்கம்**

1. நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளரின் வரவேற்புரை 4

2. இலங்கை திறந்த பல்கலைக்கழகம் **5**

3. முகாமைத்துவக் கற்கைகள் பீடம் 6

4. தொழிலுரிமைத்துவமும் சிறிய வியாபார முகாமைத்துவமும் உயர் தர சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டம் 7

5. மேலதிகத் தகவல்கள் 9

6. தொடர்பு தகவல்கள் 17

**வரவேற்புரை –நிகழ்ச்சித்திட்ட பிரதான இணைப்பாளர்**

முகாமைத்துவ கற்கைகள் பீடத்தின் ஒழுங்கைமைப்புசார் கற்கைகள் துறையினால் வழங்கப்படும் தொழிலுரிமைத்துவமும், சிறிய வியாபார முகாமைத்துவமும் (ESBM) உயர்தர சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டத்திற்கு உங்களை வரவேற்பதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

எதிர்காலத்தில் தொழிலுரிமையாளர்களாகவிருக்க கற்பதற்கான் ஆர்வத்தையும், தீர்மானத்தையும் கொண்டுள்ள உங்களை மிகவும் தனித்தன்மை வாய்ந்த நபர்களாகக் கருதுகின்றேன்.

ESBM நிகழ்ச்சித்திட்டம் ஒரு வணிக முயற்சியை ஆரம்பித்து, முகாமை செய்யும் அம்சங்களை உள்ளடக்கி, தேவையான கோட்பாடுகள் மற்றும் நடைமுறை அறிவை வழங்கி உயர் கல்விசார் மற்றும் தொழில்சார் தொழிலுரிமையாளர்களை உருவாக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டது.

திறந்த மற்றும் தொலைக்கல்வி முறையுடனான கற்பித்தல் மற்றும் கற்றல், உங்களுக்கு சிறந்த அடித்தளத்தை திறப்பதுடன், இம் முறையில், கற்கைகளில் வெற்றிகரமாக ஈடுபடும் அதேவேளை, உங்களின் வேலையையும், ஏனைய கடப்பாடுகளையும் முகாமை செய்வீர்கள்.

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில், நீங்கள் கற்கையாளர்கள், கல்வியியலாளர்கள், தொழில்விற்பன்னர்கள் போன்றோரைக் கொண்ட பாரிய வலைப்பின்னலுக்கு முகம் கொடுப்பதுடன், இது வெற்றிக்கான ஒரு பாதையை உங்களுக்கு வழிகாட்டும். ஆற்றல்மிக்க, அனுபவமுள்ள கல்விசார் அணியினர் மற்றும் இணைப்பாளர்கள் குழாம், ஆர்வமிக்க இடையறாத அனுபவத்தை நீங்கள் அடைவதை உறுதிப்படுத்த அர்ப்பணிப்புடன் செயலாற்றுவார்கள்.

இலங்கை திறந்த பல்கலைக்கழத்தில் நீங்கள் கற்கும் இவ் வேளையில் இக் கற்கை நிகழ்ச்சித்திட்டத்தில் சேரும் உங்களின் தீர்மானத்தின் சிறந்த தீர்வை அடையவும், வெற்றிகரமானதொரு தொழில் உரிமையாளராக முன்வருவதற்கும் உங்களை தயார் செய்வதற்கு எதிர்பார்க்கின்றேன்.

உங்களின் எதிர்கால முயற்சிகள் சிறப்படைய வாழ்த்துக்கள்.

டி. கல்பனி செவ்வந்தி
நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர்
தொழிலுரிமைத்துவமும், சிறிய வியாபார முகாமைத்துவமும் நிகழ்ச்சித்திட்டம்

**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம் 1978 ஆம் ஆண்டு 16ம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் இன்படி, திறந்த தொலைக் கல்வி ஊடாக வாழ்நாளுக்கான கற்றலுக்கும், அறிவுசார் சமூகத்தில் சவால்களுக்கு முகம் கொடுக்கவும் மிகத் தரமிக்கதும், வாய்ப்புக்களைக் கொண்ட பொருத்தமான கல்விற்குரிய வழிகளை மேம்படுத்தும் நோக்குடன் நிறுவப்பட்டது. இது இலங்கையில் உள்ள ஏனைய தேசியப் பல்கலைக்கழகங்களுக்கு இணையான சட்ட, கல்விசார் அந்தஸ்த்தைக் கொண்டுள்ளது. மாணவர் தமது மேலதிகக் கல்வியைப் திறந்த தொலைக் கல்வி நுட்பத்தின் (ODL) ஊடாக பெற இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு பல்கலைக்கழகம் இதுவாகும்.

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் நோக்கில் குறிப்பிட்டவாறு, இதன் கற்கைநெறிகள், பிரதானமாக தொழில் புரிவோரையும், வளர்ந்தோரையும் இலக்காகக் கொண்டிருப்பதுடன், அவர்களை சுயமாகக் கற்கவும் வைக்கின்றது. இப் பல்கலைக்கழகம் அடிப்படை நிகழ்ச்சித் திட்டம், சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டம், டிப்ளோமாக்கள், இளமாணிபட்டம், முதுமாணிபட்டங்கள், கலாநிதி, முதுமாணி கலாநிதி ஆகிய பலவிதமான கற்கை நெறிகளையும், தொடருறு கல்விநிகழ்ச்சித் திட்டங்களையும் வழங்குகின்றது.

இப் பல்கலைக்கழகம் தற்பொழுது முகாமைத்துவக் கற்கைகள் பீடம், மானிடவியல் சமூகவிஞ்ஞானபீடம், இயற்கை விஞ்ஞானபீடம், பொறியியல் தொழில் நுட்ப பீடம், கல்விப் பீடம் மற்றும் சுகாதார அறிவியல் பீடம், ஆகிய ஆறு பீடங்கள் ஊடாக 40,000க்கு மேலான மாணவர்களுக்கு கல்வியூட்டுகின்றது. நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள பிராந்திய நிலையங்கள், கற்கை நிலையங்கள் ஆகியவற்றைக் கொண்ட வலைப்பின்னல், கற்கை நிகழ்ச்சித் திட்டங்களை வழங்கவும், மாணவர்கள் தமது கல்விசார் நடவடிக்கைகளை மேற்கொள்வதை இலகுவாக்கவும் வசதியளிக்கின்றது.

**முகாமைத்துவ கற்கைகள் பீடம்**

முகாமைத்துவ கற்கைகள் பீடம் (FMS), முன்னர் முகாமைத்துவ கற்கைகள் துறை (DMS) என அழைக்கப்பட்டதுடன், அது முகாமைத்துவ கல்வி, தேர்ச்சிகள் மற்றும் தகுந்த முகாமைத்துவ நோக்குகள் ஆகியவற்றை வழங்குவதையும், அவைகளை விருத்தி செய்யவதையும் நோக்காகக் கொண்டு தனது கற்கை நிகழ்ச்சித் திட்டங்களை 1980ல் ஆரம்பித்தது. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் 6வது பீடமாகிய முகமைத்துவ கற்கைகள் பீடம் அதன் செயற்பாடுகளை 2019 மே மாதத்தில் ஆரம்பித்தது. இப் பீடம் நான்கு கல்விசார் துறைககளை கொண்டுள்ளது: ஒழுங்கமைப்புசார் கற்கைகள் துறை, மனிதவள முகாமைத்துவ துறை, சந்தைப்படுத்தல் முகாமைத்துவ துறை மற்றும் கணக்கியலும், நிதித் துறை. இந் நான்கு துறைகளும் இப் பீடத்தின் எல்லா கல்விசார் நடவடிக்கைகளுக்கும் கூட்டாக பொறுப்பாகவுள்ளன.

தற்பொழுது முகாமைத்துவ கற்கைகள் பீடம் (FMS) சான்றிதழ் நிகழ்ச்சித் திட்டங்களிலிருந்து முதுமாணிப் பட்டங்கள் வரையான பின்வரும் கல்விசார் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துகின்றது.

- தொழிலுரிமைத்துவமும், சிறிய வியாபார முகாமைத்துவமும் உயர் தரசான்றிதழ் கற்கைநெறி (ESBM)
- முகாமைத்துவ டிப்ளோமா (DM)
- முகாமைத்துவ கற்கைகள் சிறப்பு பட்டமாணி (BMS Hons)
- மனிதவள முகாமைத்துவத்தில் வணிக நிர்வாக முதுமாணி (MBA in HRM)
- பொதுநலவாய நிறைவேற்று வணிக நிர்வாக முதுமாணியும் (CEMBA), பொதுநலவாய நிறைவேற்று பொது நிர்வாக முதுமாணியும் (CEMPA)

**தொழிலுரிமைத்துவமும், சிறிய வியாபார முகாமைத்துவமும் உயர்தரச் சான்றிதழ் நிகழ்ச்சித் திட்டம் (ESBM)**

தொழிலுரிமைத்துவ வியாபாரத் துறையில் ஏற்படும் முன்னேற்றங்களும், மேம்பாடுகளும் நாட்டின் வளர்ச்சிற்கு திடமூட்டுகின்றன. இலங்கையில் உள்ள அதிகமான வியாபார முயற்சிகள் சிறிய, நடுத்தர வியாபார வகையைச் சார்ந்தவையாகவிருப்பதால், அரசாங்கம் இவ் வியாபாரங்களின் செயற்றிறனை தரமுயர்த்தி மேம்படுத்த பல முயற்சிகளை எடுத்துள்ளது. இவ் முயற்சிகளையும், நாட்டில் நிலவும் ஆரோக்கியமான வணிக சூழலையும் பொருட்படுத்தாது, அநேக வியாபாரங்கள், செயற்றிறனுடனும், ஆற்றலுடனும் முகாமை செய்ய வணிக முகாமைத்துவ கல்வியறிவு இன்மையால் கீழ் நிலையில் செயலாற்றுகின்றன. தற்போதுள்ள கல்வி தளத்திலுள்ள இடைவெளியை நிவர்த்தி செய்யும் பொருட்டு, இம் முகாமைத்துவ கற்கைகள் பீடம் நாடு முழுவதிலுமுள்ள நடைமுறையிலுள்ள மற்றும் ஆற்றலுள்ள சிறிய தொழில் முயற்சியாளர்களை இலக்காகக் கொண்டு தொழிலுரிமைத்துவமும், சிறிய வியாபார முகாமைத்துவமும் உயர்தர சான்றிதழ் நிகழ்ச்சித் திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது.

**நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கங்கள்**

தேசிய பொருளாதாரத்தில் தீவிரமாகச் ஈடுபடும் வலுவான தொழிலுரிமைத்துவ வியாபார முன்னனியை விருத்தி செய்வதற்கு பங்களிப்பதே இந் நிகழ்ச்சித் திட்டத்தின் பிரதான நோக்காகும்.

- குறிப்பிட்ட நோக்கங்கள் உள்ளடக்குபன:

  - வெற்றிகரமான தொழிலுரிமையாளராவதற்குத் தேவையான அத்தியாவசிய அறிவு, தேர்ச்சிகளை பங்குபற்றுவோர்களிடையே பெற்றுக் கொள்ளல்.
  - தொழிலுரிமைத்துவ நியமம், ஊக்கப்படுத்தல் ஆகியவற்றை விருத்தி செய்தலும், வலுவாக்குதலும்.
  - கல்வி கற்ற இளைஞர்கள், பெண்களுக்கு பெறுமதியான சுய தொழிலை அடைய உதவுதல்.
  - புதுமையாக்க மற்றும் படைப்பாற்றலுள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழிலுரிமையாலகளை தேசிய பொருளாதாரத்திற்கு குறிப்பிட்டதொரு பங்களிப்பை வழங்க ஊக்கப்படுத்தல்

**நிகழ்ச்சித்திட்ட அமைப்பு:**

**கற்கை நெறிக் காலம்:**
ஒரு கல்வியாண்டு

**போதனா மொழி:**
தமிழ், சிங்களம், ஆங்கிலம்.
(விண்ணப்பதாரர் தெரிவு செய்த கல்வி பயிற்றும் மொழியில் சிறந்த ஆற்றலைப் பெற்றிருத்தல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.)

**அனுமதிக்கான தகைமைகள்:**

விண்ணப்பதாரி 18 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும். அத்துடன்

- இலங்கை க.பொ.த (சாதாரண தரப்) பரீட்சையில், இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் கணிதம் மற்றும் முதல் மொழி உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தலோடு ஏதாவது இரு திறமை சித்திகள் (C) காணப்படவேண்டும். அல்லது
- இலங்கை திறந்த பல்கழைக்கழகத்தினால் நடாத்தப்படும் முப்பது (30) கணிப்பு விகிதத்தை கொண்ட மட்டம் 01 இற்கான சான்றிதழ்க் கற்கை நெறியை அல்லது அதற்கு மேற்பட்ட கற்கை நெறியினை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். அல்லது
- பல்கலைக்கழக மூதவையினால் ஏற்றுக்கொள்ளக் கூடிய NVQF மட்டம் 3 அல்லது அதற்கு மேற்பட்ட தகுதியை பெற்றிருத்தல் வேண்டும். அல்லது
- பல்கலைக்கழக மூதவையினால் ஏற்றுக்கொள்ளக் கூடிய சமாந்திர அல்லது உயர் தகைமைகள்.

**உள்ளடக்கம்:**

இக் கற்கை நெறி பின்வரும் எட்டு **(8)** பாடநெறிகளைக் கொண்டுள்ளது.

| **பாடநெறி குறியீடு** | **பாடநெறி தலைப்பு** | **கணிப்பு விகிதங்கள்** |
|---|---|---|
| OSC2401: | தொழிலுரிமைத்துவம் | 4 |
| OSC2402: | சிறுவணிக முகாமைத்துவம் | 4 |
| OSC2303: | அடிப்படை கணிதமும் புள்ளிவிபரவியலும் | 3 |
| MMC2404: | தொழிலுரிமையாளர்களுக்குரிய சந்தைப்படுத்தல் | 4 |
| OSC2405: | தொழிலுரிமையாளர்களுக்குரிய செயற்பாட்டு முகாமைத்துவம் | 4 |
| AFC2406: | தொழிலுரிமையாளர்களுக்குரிய கணக்கீடும் நிதியியலும் | 4 |
| OSCC2407: | வணிகதிட்டமிடல் | 4 |
| AFC2308: | பொருளியல் அறிமுகம் | 3 |
| **மொத்தம்** | | **30** |

வணிக திட்ட அறிக்கையை தயாரிக்கும் போது, மாணவர்களால் ஒரு வணிக முயற்சியை தெரிவு செய்து, முன்மொழிந்து அதனை ஒரு முறைசார் பாங்கில் அபிவிருத்தி செய்யக் கூடியதாக அவர்களுக்கு பல்கலைக்கழக முகாமைத்துவக் கல்விப் பீடத்தின் கல்விசார் உறுப்பினர் ஒருவர் வழிகாட்டுவார். இந் நிகழ்ச்சித் திட்டத்திற்குரிய சான்றிதழைப் பெறுவதற்குரிய தகுதியைப் பெறும் பொருட்டு, இவ் வணிக திட்டஅறிக்கையை உரிய நேரத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**மதிப்பீடு செய்யும் முறை**

மாணவரின் செயற்றிறன் பின்வரும் நான்கு பிரிவுகளுக்கான விதிகளின் அடிப்படையில் மதிப்பிடப்படும்.

- தொடர் ஒப்படைகள்
- சிறு கருத்திட்டங்கள்
- சிறிய மற்றும் நடுத்தர வணிக திட்டம்
- இறுதிப் பரீட்சை

**கற்கை நெறிக் கட்டணம்:**

இந் நிகழ்ச்சித் திட்டத்தின் முழுக்கட்டணம் ரூபா. 30,000 ஆகும். இக் கட்டணத்தை இரண்டு தவணைகள் அடிப்படையில் செலுத்தலாம்.

முதலாம் தவணைப் பணம்- ரூபா. 19,200 (பதிவுக் கட்டணம் மற்றும் வசதிக் கட்டணம் அடங்கலாக)
இரண்டாம் தவணைப் பணம்- ரூபா. 10,800

குறிப்பிட்ட ஒரு பாட நெறியை மீள் கற்பவர்கள், அதற்காக மீள் பதிவு செய்வதுடன், அவ்வாறு மீள் கற்கும் பாடநெறிகளுக்குரிய கட்டணங்கயையும் அவர்கள் செலுத்துதல் வேண்டும்.

**சான்றிதழ் வழங்குதல்**:

- இறுதிப் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு, இலங்கை திறந்த பல்கலைக்கழக விதிகளுக்கு அமைவாக பல்கலைக்கழகம் தொழிலுரிமைத்துவமும் சிறிய வியாபார முகாமைத்துவக்கற்கை நெறியில் உயர் தர சான்றிதலை வழங்கும்.

- இவ் உயர்தர சான்றிதழ் கற்கை நெறியைப் பூர்த்தி செய்யும் மாணவர், முகாமைத்துவ கற்கைகள் நுழைவுப் பரீட்சைக்குத் தோற்றாமல் முகாமைத்துவ கற்கைகள் (சிறப்பு) பட்டமாணி நெறிக்குரிய அனுமதிக்கான தகுதியைப் பெற்றுக் கொள்வர்.

**இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் கற்கை முறைமை பற்றிய மேலதிகத் தகவல்கள்**

- திறந்த பல்கலைக்கழகத்தின் கலைச் சொல்லகராதியின் படி, ''பாடநெறி'' என்பது ஒரு கல்வியாண்டிற்குள் பூர்த்தி செய்யப்படும் கற்கையின் அடிப்படை கூறாகும்.

- கட்டாய பாடநெறிகளினதும், தெரிவு செய்யப்படும் பாடநெறிகளினதும் கூட்டிணைப்பே ''கற்கை நிகழ்ச்சி'' திட்டமாகும். கற்கை நிகழ்ச்சித் திட்டத்தினை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்வது சான்றிதழ், டிப்ளோமா அல்லது பட்டமாணியொன்றை பெறுவதற்கு இட்டுச் செல்லும். மாணவரொருவர் குறிப்பிட்ட கற்கை நிகழ்ச்சித் திட்டத்தின் தேவைகளைப் நிறைவேற்ற ''கட்டாய பாடநெறிகளை'' பூர்த்தி செய்தல் வேண்டும்.

- இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் கல்விசார் நிகழ்ச்சித் திட்டங்களின் வகைகள் பின்வருமாறு.

  - அடிப்படைக் கற்கை நெறி
  - சான்றிதழ் கற்கை நெறி
  - உயர் தர சான்றிதழ் கற்கை நெறி
  - டிப்ளோமாக் கற்கை நெறி
  - பட்டமாணி கற்கை நெறி
  - பட்டப்பின் படிப்பு கற்கை நெறி
  - முதுமாணி கற்கை நெறி
  - முது தத்துவமாணி/கலைமாணி
  - தொடருறு கல்வி நிகழ்ச்சித்திட்டற்கள்

- அடிப்படை நிகழ்ச்சித்திட்டங்கள் ஏனைய கல்விசார் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு திறவுகோலாகும். அவைகள் மட்டம் 1 (F1), மட்டம் 2 (F2) ஆகிய இரு மட்டங்களில் வழங்கப்படுகின்றது.

- இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் அடிப்படைக் கற்கை நிகழ்ச்சித் திட்டத்தை பூர்த்திசெய்யும் போது குறித்த பாடப்பரப்பில் பெறும் அறிவு, மரபுரீதியான பல்கலைக்கழகத்தில் அனுமதிக்காகக் காத்திருக்கும் மாணவர்களின் அறிவுக்குச் சமமானதாகும்.

- ஒவ்வொரு பாடநெறிக்கான பாடக் குறியீடும், 7 எண்களைக் கொண்டிருக்கும். எழுத்துக்களின் இயல்புகளும் பின்வருமாறு காணப்படும். உதாரணமாக: AFC2406/MMC2404/OSC2407
  - முதல் இரு எழுத்துக்களும் கற்கை நெறிப் பாடப்பரப்பை சுட்டிக்காட்டுகின்றது (அட்டவணை 1ஐப் பார்க்கவும்)
  - மூன்றாம் எழுத்தும் 1ஆம் எண்ணும் கற்கை நெறி மட்டத்தையும், வகையையும் சுட்டிக்காட்டுகின்றது. (அட்டவணை 2ஐப் பார்க்கவும்)
  - 2ஆம் எண் தற்போதைய கணிப்பு விகிதத்தைச் சுட்டிக்காட்டுகின்றது. (அட்டவணை 3ஐப் பார்க்கவும்)
  - இறுதி இரு எண்கள் பாடநெறிக்கான தனியான தொடரிலக்கத்தைக் காட்டுகின்றது.

**அட்டவணை 1:** முகாமைத்துவ கற்கைகள் பீடத்தினால் நடத்தப்படும் கற்கைநெறிகள்

| **துறை** | **குறியீட்டுஎண்** |
|---|---|
| ஒழுங்கமைப்புசார் கற்கைகள் | OS |
| கணக்கிடலும் நிதியியலும் | AF |
| சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் | MM |
| மனித வள முகாமைத்துவம | HR |

**அட்டவணை 2:** கல்விநிகழ்ச்சித் திட்டம்/மட்டம்

| **கற்கை நெறிமட்டம்** | **கற்கை நிகழ்ச்சித் திட்டங்கள்** | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | **அடிப்படைக் கற்கை நெறி** | **சான்றிதழ்** | **டிப்ளோமா** | **பட்டப் படிப்பு** | **பட்டப்பின் படிப்பு** | **தொடர் கல்விக் கற்கை நெறி** |
| 1 | F1 | C1 | | | | E1 |
| 2 | F2 | C2 | | | | E2 |
| 3 | | | D3 | U3 | | E3 |
| 4 | | | D | U4 | | E4 |
| 5 | | | | U5 | | E5 |
| 6 | | | | U6 | | E6 |
| 7 | | | | | P7 | E7 |
| 8 | | | | | P8 | E8 |
| 9 | | | | | P9 | |
| 10 | | | | | P10 | |
| 11 | | | | | P11 | |
| 12 | | | | | P12 | |

**கற்கை நிகழ்ச்சித் திட்டத்தை வழங்கலும் மதிப்பிடலும்**

இலங்கை திறந்த பல்கலைக்கழகம் தொலைக் கல்வியின் ஊடாக மாணவர்களுக்கு அறிவினை வழங்குகின்றது. போதனையாளருக்கும் மாணவர்களுக்கும் நெருங்கிய தொடர்பினைக் கொண்டிராதவகையில் இம் முறை அமைந்துள்ளது. எனினும் அச்சிடப்பட்ட பாடநூல்களின் ஊடாகவும் கட்புல, செவிப்புல சாதனங்களின் ஊடாகவும், தேவைப்படுமிடத்து நேருக்கு நேர் கல்விசார் ஆற்றுப்படுத்தல் மூலமாகவும் தொடர்பு ஏற்படுத்தப்படுகின்றது. இம் முறையின் கீழ் தொடர் மதிப்பீடு மூலமாகவும் பரீட்சைகள் மூலமாகவும் மாணவர்களின் மதிப்பீடு நடைபெறுகின்றது.

<u>**பாடநெறி நூல்கள்**</u>

- **அச்சிடப்பட்ட பாடநூல்கள்**
  ஒவ்வொரு மாணவராலும் பெறப்படும் அச்சிடப்பட்ட பாடநூல்களே இம் முறையின் அடிப்படையான மூலகமாகும். அவைகள் மாணவர்களுக்கு முதன்மை கற்கை நூல்களாகவிருப்பதுடன், நேரடி விரிவுரைகளுக்கு சமமானதாகும். அவைகள் அடிப்படைக் கோட்பாடுகள், வினாக்கள், நடவடிக்கைகள் ஆகியவற்றை உள்ளடக்கியிருப்பதுடன், மாணவர்களது சுய சிந்தனையையும், சுய பகுத்தாராயும் திறனையும் வளர்க்கவும் உதவுகின்றது.

- **கட்புல செவிப்புல சாதனங்கள்**

கட்புல செவிப்புல சாதனங்களால் வீடியோப் படங்களையும், உரிய பாடநூல்களையும் மாணவர் பார்ப்பதால் கற்பதை இலகுவாக்குகின்றது. அத்துடன் இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்கள், குறிப்பிட்டதுறைகளின் நிபுணர்கள் ஆகியோரினால் நடாத்தப்படும் ஒலிப்பதிவு நாடாக்கள் சமர்ப்பனங்களை கேட்கும் வாய்ப்பையும் வழங்குகின்றது. **Online**

- **இணையத்தலத்தினால் மேலதிக உதவிகள்**

ESBM நிகழ்ச்சித்திட்டத்தின் அநேகமான பாடநெறிகள் கற்கையாளர்கள் அதிக பாட அறிவையும், நவீன கற்றலின் போக்கையும், கருவிகளையும் அறிந்து கொள்ளும் நோக்குடன் இணையத்தள பாடநெறிகளால் உதவப்படுகின்றன. இவ் இணையத்தள பாடநெறிகளை வீட்டிலிருந்து அல்லது பிராந்திய.்.கற்கை நிலையங்களில் அமைந்துள்ள OUSL கணனி நிலையங்களில் இருந்து அணுகி பெற்றுக் கொள்ளலாம்.

இணையத்தள பாடநெறிகளை அணுகுவதற்குரிய URL: http://learnousl.ou.ac.lk.
 **User name - பாவனையாளர் பெயர்:** மாணவர் அடையாள அட்டை இல: (இதற்காக பதிவுப் புத்தகத்தலுள்ள சுய தகவலிலுள்ள “s” உடன் ஆரம்பமாகும் இலக்கத்தைப் **பார்க்கவும்**)
 **Password – கடவுச்சொல்:** தேசிய அடையாள அட்டை இலக்கம்
URL to access online courses: http://learnousl.ou.ac.lk.

- **நாட்பாடசாலைகள்**

திறந்த பல்கலைக்கழகத்தின் தொலைக்கல்வி முறையில் அச்சிடப்பட்ட பாடநூல்கள், கட்புல, செவிப்புலச் சாதனங்கள் என்பன பிரதான கூறுகளாகும். இவைகளுக்கு மேலாக நாட்பாடசாலை ஒவ்வொரு கால வேளையிலும் பிரதேச கற்கை நிலையங்களிலும், கற்கை நிலையங்களிலும் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் கல்வித் துறை சார்ந்தோராலும், வருகை தரும் விரிவுரையாளர்களினாலும் நடத்தப்படும். இந்த நாட்பாடசாலைகள் பிரதானமாக மாணவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடலுக்கும் பகுத்தாராய்வதற்குமேயாகும்.

- **ஒப்படைகளும் பரீட்சைகளும்**

மாணவர்களின் செயற்றிறன் தொடர் மதிப்பீடு (CA) மூலமும், பரீட்சைகளாலும் மதிப்பிடப்படும். குறித்த ஒரு கல்வியாண்டில் மாணவர் குறிக்கப்பட்ட ஒப்படைகளை சமர்ப்பிக்குமாறு கேட்கப்படுவதுடன், அது திருத்தப்பட்டு தரமிட்டு விரிவுரையாளரின் குறிப்புரைகளுடன் மீண்டும் மாணவர்களுக்கு அனுப்பிவைக்கப்படும். ஒப்படைகளின் வகையும்,அமைப்பும் அதன் எண்ணிக்கையும் பொறுப்பாகவுள்ள கல்விதுறையினால் தீர்மானிக்கப்படும். இது பாட நெறிகளுக்கு ஏற்றவாறு வேறுபட்டதாக இருக்கும். இத் தொடர் மதிப்பீடானது, மூடிய பாடநூல் பரீட்சைகள், திறந்த பாடநூல் பரீட்சைகள், வீட்டில் இருந்து எழுதும் ஒப்படை, திட்ட முன் மொழிவுகள் என்பவற்றின் மூலமாக நடைபெறும்.

மாணவர்களைச் சேர்த்ததன் பின்னர் அவர்களுக்கு வழங்கப்படும் வழிகாட்டி கைந்நூலை வாசித்து, தொடர் மதிப்பீடு, தொடர் கற்றலின் முக்கியத்துவத்தினை விளங்கிக் கொள்ளல் வேண்டும். தொடர் மதிப்பீட்டில் சித்தியடையாது, தகுதியைப் பெறாது இறுதிப் பரீட்சை எழுத மாணவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள். ஒவ்வொரு கல்வியாண்டின் இறுதியிலும், இறுதிப் பரீட்சை நடைபெறும்.

இறுதி தரம் அல்லது பெறப்படும் சித்தியானது ஒப்படை, இறுதிப் பரீட்சைப் புள்ளியின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும். மாணவர்கள் இறுதிப் பரீட்சைக்கான தகுதியினை அதாவது ஒப்படைகளின் சித்தியை அடையாத போது கற்கை நெறிக்குத் தம்மை மீண்டும் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்கப்படுவார்கள்.

மாணவர் தகுதியைப் பெற்றிருந்தும், இறுதிப் பரீட்சையைத் திறமையாகச் செய்யாதவிடத்து மீண்டும் இறுதிப் பரீட்சைசைக்குத் தோற்றவேண்டும். அவர்கள் மீள்பயிலும் மாணவர்களாகப் பதிவு செய்து மாணவ உரிமையை பெறல் வேண்டும்.

- **பிராந்திய சேவைகள்**

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம் இலங்கை பூராகவும் பிராந்திய, கற்கை நிலையங்களின் வலைப்பிண்ணலைக் கொண்டுள்ளது. இந் நிலையங்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான விரிவுரைகள், பாடநூல் பற்றிய கலந்துரையாடல்கள், நூலக, கட்புல, செவிப்புலஉதவிகள், பாடநூல் விநியோகம், பரீட்சைகளை நடாத்துதல், ஆற்றுபடுத்தலை வழங்கல் போன்றவற்றையும் வழங்குகின்றன. அட்டவணை 4ம், 5ம் பிரதேச, கற்கை நிலையங்களின் தகவல்களை வழங்குகின்றன.

**அட்டவணை 4 : பிராந்திய நிலையங்கள்**

| **இடம்** | **குறியீடு** | முகவரி | **தொலைபேசி இலக்கம்** |
|---|---|---|---|
| கொழும்பு | WP10 | OURC, நாவல, நுகேகொட | 011-2853930<br>Ext. 380<br>Staff:281,630, 464,420,621 |
| கண்டி | CP20 | OURC, பொல்கொல்ல, கண்டி | 081-2494083<br>084/495/496 / 497 |
| மாத்தறை | SP30 | OURC, நூபே, மாத்தறை | 041-2222943<br>041- 2229782 |
| யாழ்ப்பாணம் | NP40 | OURC, பிரவுன்ஸ் வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம் | 021 2223374 |
| அனுராதபுரம் | NC50 | OURC, ஜயந்தி மாவத்தை, (டிப்போ பகுதி), அனுராதபுரம் | 025 2222871 |
| மட்டக்களப்பு | EP60 | OURC, இல.23, புது வீதி, மட்டக்களப்பு | 065 2222264 |
| குருநாகல் | NW70 | OUSC, நீர் கொழும்பு வீதி (நிஸங்கமாவத்தை | 037 2223473 |

| | | | |
|---|---|---|---|
| | | சந்தி) மல்கடுவாவ, குருநாகல். | |
| பதுளை | UP80 | OURC, இல.179, கெபிடிபொலவீதி, பதுளை. | 055 3012151<br>055 2228842 |
| இரத்னபுரி | SG90 | ஹெடல்லன, இரத்னபுரி | 045 2228660 |

**அட்டவணை 05 : கற்கை நிலையங்கள்**

| **இடம்** | **குறியீடு** | **முகவரி** | **தொலைபேசி இலக்கம்** |
|---|---|---|---|
| அம்பலாங்கொடை | SP31 | OUSC, 80/1, பொல்வத்தை வீதி, ஹல்வத்துர, அம்பலாங்கொடை | 091 2258585 |
| அம்பலாந்தோட்டை | SP33 | OUSC, ராஜசரனகம வீதி, லுனம தெற்கு, அம்பலாந்தோட்டை | 047 2225533 |
| அம்பாறை | EP61 | OUSC, சாமபுர, இங்கினியாகலை வீதி, அம்பாறை | 063 2222052 |
| பண்டாரவளை | UP81 | OUSC,புனித தோமாஸ் வீதி,வேவத்தென்ன,பண்டாரவளை | 057 2222820 |
| காலி | SP32 | OUSC, லவுதுவ, குாலி | 091 2223784 |
| கம்பஹா | WP11 | OUSC,கம்பஹா வீதி, மிரிஸ்வத்த, முதுனாகொடை, கம்பஹா | 033 2234571/2 |
| ஹட்டன் | CP21 | OUSC, புனித கப்ரியல் கொன்வன்ட், ஹட்டன். | 051 2225139 |
| களுத்துறை | WP12 | OUSC, இல. 66/2, நாகொடவீதி, களுத்துறை | 034 2223399 |
| கேகாலை | SG91 | OUSC, குமாரதுங்க முனிதாச வீதி, கேகாலை | 035 2222501 |
| கிளிநொச்சி | NP42 | OUTC, 155ம் கட்டை, | 021 2283970 |

| | | | |
|---|---|---|---|
| | | கண்டி வீதி, கிளிநொச்சி. | |
| குளியாப்பிட்டி | NW72 | OUSC, இல. 21, லயனல் ஜயதிலக்க மாவத்தை, குளியாப்பிட்டி. | 037-3133655 |
| மன்னார் | NP44 | OUSC, ஆர் டி எஸ் வீதி, மைனர் செமினரி வீதி, சாவக்கட்டு, மன்னார். | 023-2251999 |
| மோனறாகலை | UP82 | OUSC, தொழில்நுட்பக் கல்லூரி சந்தி,சிறிகல, பொத்துவில் வீதி, மொனறாகலை | 055 2277395 |
| முல்லைத்தீவு | NP43 | OUSC, ஓட்டுசுட்டான் வீதி, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு | 021 - 2290868 |
| பொலன்நறுவை | NC51 | OUSC, 24ம் கட்டை, பென்டிவேவா, ஜயந்திபுர. | 027 2225776 |
| புத்தளம் | NW71 | OUSC, 1/37 கொழும்பு வீதி, புத்தளம். | 032 2266822 |
| வவுனியா | NP41 | OUSC, இல. 366, கண்டி வீதி, தெக்காவத்தை, வவுனியா. | 024 2222995 |
| திருகோணமலை | EP62 | OUSC, இல. 26/A, தபால் அலுவலக வீதி, திருகோணமலை | 026-2222088 |
| மாத்தளை | CP03 | OUSC, இல. 09, எம்.சி. வீதி, மாத்தளை | 066 2058083 |

OURC: திறந்த பல்கலைக்கழக பிராந்திய நிலையம்;
OUSC: திறந்த பல்கலைக்கழக கற்கை நிலையம்

### நூலக வசதிகள்

நூலக வசதிகள் நாவல மத்திய வளாகத்திலும், பல ஏனைய பிராந்திய கற்கைகள் நிலையங்களிலும் அமைந்துள்ளன. உசாத்துணை வசதிகள் பிரதானமாக இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் கொழும்பு பிராந்திய நிலையத்தில் வழங்கப்படுகின்றது. பிராந்திய நிலையங்களில் சில நூலக வசதிகளை வழங்க பல்கலைக்கழகத்தினால் முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. ஆயினும் நாவலையிலுள்ள மத்திய நூலகம் சிறந்த வசதிகளை வழங்குவதுடன், மாணவர்கள் அவைகளை பயன்படுத்துமாறு ஊக்கப்படுத்தப்படுகின்றார்கள்.

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் நூலக முறைமை பாரம்பரிய நூலகங்களைவிடவும் வேறுபட்டது. நாடுபூராகவும் பரந்திருக்கும் மாணவர் தொகுதியின் தேவைகள் அது முறைமை மாணவர்களுக்கு உசாத்துணை வசதிகளையும், வரையறுக்கப்பட்ட இரவல் வழங்கும் வசதிகளையும் வழங்குகின்றது. மாணவர்களுக்கு இரவல் வழங்கல் பொதுவாக ஒரு வாரத்திற்குரியதாகும். ஆயினும், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் உசாத்துணை வசதிககளுக்கு வரையறை கிடையாது.

### கட்டணங்களும் ஏனைய செலவினங்களும்

கட்டணங்கள் கேட்கப்படும் போது உரியகாலத்தில் செலுத்தப்படல் வேண்டும் என்பதே பொதுவான விதியாகும். பல்கலைக்கழகம் எவ்வித முன்னறிவித்தல் இன்றி கட்டணங்களையும், ஏனைய செலவீனங்களையும் மாற்றியமைக்கலாம். செலுத்தப்பட்ட கட்டணங்கள் மீளப் பெறக்கூடியதல்ல.

- ஒரு விண்ணப்பதாரி ஒரு கல்வி நிகழ்ச்சித் திட்டத்திற்காக இலங்கை திறந்த பல்லைக்கழக்தில் இடமளிக்கும் போது, குறித்த தினத்தில் கற்கைக்குரிய கொடுப்பனவுக்கான கட்டணங்கள் அடங்கிய விபரப் பட்டியலைப் பெற்றுக் கொள்வார். குறித்த தினத்தில் கட்டணங்கள் செலுத்தத் தவறுமிடத்தில் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட இடம் இரத்துச் செய்யப்படும்.
- கட்டணங்கள் செலுத்தும் முறை கொடுப்பனவுக்காக விபரப்பட்டியலில் காட்டப்பட்டிருக்கும். எனினும், போதனைக்கான கட்டணம் இரு தவணைகளில் செலுத்தப்படலாம். முதலாவது தவணைக் கட்டணம் பதிவின் போது செலுத்தப்படல் வேண்டும்.
- குறித்த ஒரு வருடத்திற்கான போதனைக் கட்டணம் 10 சதவீதத்தினால் வருடாந்தம் அதிகரிக்கப்படும். அத்துடன் மாணவர் குறித்த பாடநெறியினை மீண்டும் பயில்வதாயின் போதனைக் கட்டணம் இரு மடங்காகச் செலுத்தப்படல் வேண்டும்.

### பதிவு செய்தல்

- மாணவர்கள் தாம் விரும்பும் கற்கைநெறியினை இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் பயில்வதற்குக் குறித்தகாலத்தில் வேண்டப்பபடும் கட்டணத்தைச் செலுத்தி பதிவு செய்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றார்கள்.
- எனினும் மாணவர்கள் தாமாக வரமுடியாத நிலை ஏற்படுமிடத்து தமக்காக உரிமையுள்ள ஒருவரை பதிவு செய்யும் தினத்தன்று அனுப்பிவைக்கலாம்.
- பதிவு செய்தல் பிராந்திய நிலையங்களிலும் தெரிவு செய்யப்பட்ட கற்கை நிலையங்களிலும் நடைபெறும். இந்த நிலையங்களில் பதிவு செய்வதற்கான வசதி

குறித்த நிலையத்தில் விண்ணப்பிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்ததாகும்.

- தற்பொழுது பதிவு செய்தல் செயல்முறைகள் பிரதானமாக இணைய முறைமை (Online system) ஊடாக இடம் பெறுகின்றது. இம் முறைமையில் பதிவு செய்யும் பொருட்டு உங்களின் Basic profile ஐ செயற்படுத்துவதற்கான அடிப்படை வழிகாட்டி பின் இணைப்புக்களில் தரப்பட்டுள்ளது.
- தற்போதைய பதிவு செய்தலில் அதி கூடிய 37 புள்ளிகளைக் கொண்ட ஆகக் கூடிய இரு பாட நெறிகளுக்கே பதிவு செய்ய பின்வருமாறு அனுமதிக்கப்படும்:
- அதி கூடிய 30 கணிப்பு விகிதத்தைக் கொண்ட இரு முறைமையான கல்வி நிகழ்ச்சித்திட்டத்திற்கும், ஆகக் கூடிய 7 கணிப்பு விகிதத்தைக் கொண்ட தொடர்கல்விக் கற்கைநெறிக்கும் மாணவர் பதிவுசெய்யப்படலாம்.
- மாணவர்கள் 2 கணிப்பு விகித்தைக் இரு கல்வி நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஒரே சமயத்தில் பதிவு செய்யுமிடத்து கல்விச் செயற்பாடும் பரீட்சையும் சில சமயங்களில் ஒன்றுடன் ஒன்று முரண்படலாம். இதனால் ஏற்படும் வசதியீனம் அல்லது பிரதிகூலங்களுக்கு பல்கலைக்கழகம் எவ்வித பொறுப்பினையும் ஏற்றுக்கொள்ளாது.
- ஒரு மாணவருக்கு அவர் முதலாவதாக ஏதேனும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு பதிவு செய்வதற்காக விண்ணப்பிக்கும் போது அவ் வருடத்திற்குரிய மாணவர் பதிப்புரிமை வழங்கப்படமாட்டாது. அவர் ஆகக்குறைந்தது 8 கணிப்பு விகிதத்தைக் கொண்ட பாட நெறிகளை தெரிவு செய்ய வேண்டப்படுவார்.
- பதிவு செய்யும் இறுதித்தினத்தில் இருந்து 7 மாதங்களுக்கே மற்ற எல்லா கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மாணவர் பதிப்புரிமை வழங்கப்படும். அதன் பின்னர் இறுதிப் பரீட்சைக்குத் தோற்ற மாணவர் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

**கற்கைநெறிகளில் மாற்றம் செய்தல்**

மாணவர் ஒருவர் கற்கை நிகழ்ச்சித்திட்டத்திற்கு பதிவுசெய்த பின் கற்கைநெறிகளைச் சேர்ப்பதற்கு அல்லது அகற்றுவதற்கு அனுமதியளிக்கப்படுவார். ஆயினும் அவ்வாறான மாற்றங்கள், கற்கை நிகழ்ச்சித்திட்டத்தில் குறிப்பிட்ட சேர்த்தல் அல்லது அகற்றுதல் காலப் பகுதியில் மட்டுமே அனுமதிக்கப்படும் என்பதை கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

**தொடர்பு தகவல்கள்**

**ESBM Team**

Ms.D.K.செவ்வந்தி
கற்கைநெறி இணைப்பாளர்
தொலைபேசி – 0112 881024/ 0112 881255

Ms.J.P.R.மனீஷா
செயற்திட்ட உதவியாளர்
தொலைபேசி - 0112 881024/ 0112 881255/0716393714
மின்னஞ்சல் - esbm@ousl.lk

Ms.M.K.O.முனசிங்ஹ
செயற்திட்ட உதவியாளர்
தொலைபேசி - 0112 881024/ 0112 881255/0716393714

மின்னஞ்சல் - esbm@ousl.lk

**தபால் முகவரி**

கற்கைநெறி இணைப்பாளர்
தொழிலுரிமைத்துவமும் சிறிய வியாபார
முகாமைத்துவமும் உயர்தர சான்றிதழ் கற்கை நெறி
முகாமைத்துவ கற்கைகள் பீடம்
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்,
தபால் பெட்டி – 21
நாவல,
நுகேகொட.

# The Faculty

Prof. N. Abeysekera
[B.Sc.Marketing (Sp)(Hons)(USJ),
MBA in Marketing (Colombo),
PhD (Colombo),
MCIM, MSLIM, PGD in MKT (UK),
MAAT, Intermediate (ICASL)
Dip in CMA]
Dean/ / Faculty of Management Studies
Professor in Management Studies
E-mail: nabey@ou.ac.lk
Telephone: 0112881408

Prof. V. Sivalogathasan
[B.Com(Sp)(Hons) (PDN), MBA(IB)(AIT,Thailand),
PhD (ZJU)]
Professor in Management Studies
E-mail: vsiva@ou.ac.lk
Telephone: 0112881255

Prof. L.P.S Gamini
[BSc. Business Administration (Sp)(Hons) (USJ),
MCom(KLN), PhD (Delhi)]
Professor in Accounting & Finance
E-mail: lpgam@ou.ac.lk
Telephone: 0112881255

Dr S.S.K. Edirisinghe
[B.Com (Sp)(Hons)(KLN), MCom(KLN),
Certificate in Int.Busi. (AIT-Thailand)
PhD (KLN)]
Head/ Department of Organizational Studies
Senior Lecturer (Gr. I)
E-mail: ssedi@ou.ac.lk
Telephone: 0112881143

Mr. S.A.D. Senanayake
[B.Sc (Sp)(Hons)(KLN), MBA(Delhi)]
Senior Lecturer (Gr.I)
E-mail: sasen@ou.ac.lk
Telephone: 0112881142

Dr. S. J. M. P. U. Seneviratne
[BBA.(CBO), M.Sc. in Management (USJ),
PhD(Leicester)]
Senior Lecturer (Gr. I)
E-mail : sjsen@ou.ac.lk
Telephone: 0112881142

Mr. K.P. Nishantha
[B.Sc. Financial Management.
(Hons)(SUSL),
M.Sc. in Management (USJ),
CTHE, Certified Trainer]
Head/ Department of Human Resource
Management.
Senior Lecturer (Gr I)
E-mail: kpnis@ou.ac.lk
Telephone: 0112881434

Prof. (Ms) H.D.D.C.Liyanagamage
[BSc.Management (Sp)(Hons) (USJ),
MBA in Finance(Colombo),
Intermediate (ICASL),
PhD(Colombo) ,FCPM]
Head/ Department of Accounting & Finance
Professor in Accounting & Finance
E-mail: hdcha@ou.ac.lk
Telephone: 0112881424

Dr. S. Sapukotanage
[BBA (Colombo), M.Sc. in Management.
(USJ),PhD (USJ)]
Head/Department of Marketing
Management
Senior Lecturer (Gr. II)
E-mail: ssapu@ou.ac.lk
Telephone: 0112881413

Mr. K.P.J.M. Pathirana
[BMS(HRM)Sp. (Hons)OUSL,
M.Com (KLN)]
Senior Lecturer - G.II
E-mail: kppat@ou.ac.lk
Telephone: 0112881255

Mr. H.M.J.C.B. Heenkenda
[BBA. Enterprenurship (Sp)(URSL)],
M.Sc.in Management(USJ)]
Senior Lecturer (Gr.II)
E-mail: hmhee@au.ac.lk

Mr. C.P. Weerasekara
[B.Sc. Financial Management (Sp)(SUSL),
M.Sc.in Management(USJ)]
Senior Lecturer (Gr.II)
E-Mail: cpwee@ou.ac.lk
Telephone: 0112881140

Mr.W.A.R. Senevirathne
B.Sc.Accountancy and Finance (Sp)
(WUSL),MBA(WUSL),
MAAT,CASL,Final,CBF ]
Senior Lecturer (Gr.II)
E-Mail: wasen@ou.ac.lk
Telephone: 0112881255

Ms. G.A.J Silva
[B.Sc. Business Administration (Sp)(USJ),
MCom (KLN)]
Lecturer
E-mail: gasil@ou.ac.lk
Telephone: 0112881023

Ms. S. Manoshika
[B.B.Mgt. Human Resource Management
(Sp)(KLN), B.Sc. Applied Accounting (OBU),
MBA (PIM), ACCA Finalist]
Lecturer
E- Mail: smano@ou.ac.lk
Telephone: 0112881023

Ms. J. C. Hapugoda
[B.Sc. Statistics with Computer Science (Sp)(CBO),
MFE (CBO), CIMA (UK)Passed Finalist]
Lecturer (Probationary)
E-Mail: jchap@ou.ac.lk
Telephone: 0112881140

Ms. A.A.I. Lakmali
[B.Sc. Marketing Management (Sp.)(USJ),
M.Sc. in Management (USJ)]
Lecturer (Probationary)
E- Mail: aalak@ou.ac.lk
Telephone: 0112881024

Ms. A. H.U. Perera
[B.B.Mgt. Human Resource Management
(Sp)(KLN), MBA (PIM)
CIMA Passed Finalist]
Lecturer (Probationary)
E- Mail: ahper@ou.ac.lk
Telephone :0112881023

Ms. D.K. Sewwandi
[B.Sc.Business Administration
(Sp) USJP, PGD in Management(RUSL),
MBA(KLN)]
Lecturer (Probationary)
Programme coordinator-ESBM
E-Mail: dksew@ou.ac.lk
Telephone :0112881024

Mr. T.H. Rathnayake
[B.Sc. Marketing Management (Sp) (USJ)]
Temporary Lecturer
E-Mail: thrat@ou.ac.lk
Telephone:0112881413

Ms. R.H.A.T. Perera
[B.Sc. Marketing Management (Sp)
(EUSL)]
Temporary Lecturer
E-Mail: rhper@ou.ac.lk
Telephone:0112881413

Ms. M.G.C.D. Mahakumbura
[BSc. Business Information Systems (Sp)
(USJ)]
Temporary Lecturer
E-Mail: mgmaha@ou.ac.lk
Telephone:0112881024

Ms. P.D. Dananjani Kasunika
[B. Com (Sp.) in Financial Management
(KLN)]
Temporary Assistant Lecturer
E-Mail: danapayagala@gmail.com
Telephone:0112881025

Ms.R.P.D.N.Ranasinghe
Attorney –at-law
[LLB (OUC)LLM (NALSAR University-
India), Dip.in Diplomacy & word Affairs
(BIDTI)]
Lecturer (on contract)
E-Mail: rpran@ou.ac.lk
Telephone :0112881024

Dr.S.M.D.C.W Senarathne
[PhD(Industrial Economics),WHUT,China,
MBA (Finance) CBO, B.Sc. HRM (Sp),USJ
ACA,ACMA (UK), CGMA]
E-Mail: smdse@ou.ac.lk
Telephone :0112881413

Ms.H.M.J.S.Herath
[B.Sc Finance (Sp)(USJ)
CIMA Passed Finalist, ACCA Passed Finalist
Master of Financial Economics(Merit)]
Lecture (On Contract)
E-Mail: hmjsh@ou.ac.lk
Telephone :0112881023

Ms.M.Sampavi
[BBA (Hons)(Sp) in Financial Management (UOJ)
AAT Passed Finalist]
Lecturer (on contract)
E-Mail: msamp@ou.ac.lk
Telephone :0112881023

Ms.A.Sumaiya
[B.B.Mgt,Human Resource Management (Sp)(KLN)]
Lecturer (on contract)
E-Mail: asuma@ou.ac.lk
Telephone :0112881413

Ms.M.A.D.A.Samali
[BBA (Marketing) (Sp) (CBO), Pg. Dip in
Marketing (CIM-UK), DDMP (SLIM)]
Lecturer (on contract)
E-Mail: msamp@ou.ac.lk
Telephone :0112881413

Ms.S.M.H.D.Samarakoon
BMS(Hons) OUSL
Lecturer (on contract)
E-Mail: smhsa@ou.ac.lk
Telephone :0112881413

Ms.P.N.Gamaethige
[B.Sc. Business Administration (Sp) (USJ),
Certified Business Accountant (ICASL)]
Lecturer (on contract)
E-Mail: pngam@ou.ac.lk
Telephone :0112881024